**O.S.No.69/2018** **தேதி – 16.03.2026**

**வா.சா.1.– விஜயசேகரன்**

**9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

எங்களது குடும்ப ஏற்பாட்டின்படி ஒதுக்கப்பட்ட சொத்தில் பக்கம் 23 லிருந்து 92 வரை உள்ள சொத்துக்கள் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் உள்ளது என்றால் உள்ளது. ஆனால் அதில் உள்ள விபரங்களை படிக்காமல் நம்பிக்கையில் பேரில் நான் கையெழுத்து போட்டேன். பக்கம் எண் 23 லிருந்து 92 வரை உள்ள சொத்துக்கள் என்வசம்தான் உள்ளது என்றால் வா.சா.ஆ.18 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் பக்கம் எண்.84 ல் வரிசை எண்.15 ல் காட்டப்பட்டுள்ள 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் என்னால் 9 ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்த சொத்துக்கள் என்றால் சரிதான். அது தனசேகரன் சொல்லிக் கொடுத்ததன்பேரில் கிரையம் செய்து கொடுத்தேன். கிரையத்திற்கான தொகை காசோலையாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் கையெழுத்து என்றால் சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.17 ஆகும்.** இந்த ஆவணம் தனசேகரன் மற்றும் அஜெய் சக்கரவர்த்தி ஆகியோர்கள் சொன்னதின்பேரில் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். வா.சா.ஆ.18 ஆவணம் உண்மையான ஆவணம் என்றும், மேற்படி ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்துள்ளது என்றும், மேற்படி ஆவணத்தின்படிதான் 9 ம் பிரதிவாதிக்கு எனது பண நெருக்கடி காரணமாக கிரையம் கொடுத்தேன் என்றும், மேற்படி பண நெருக்கடிக்கு 1 ம் பிரதிவாதி ஞானசேகரன் தான் காரணம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ. 17 ல் 1 ம் பிரதிவாதி ரூபாய் 5 கோடி 18 லட்சத்து 50 ஆயிரத்தை எனக்கு கொடுக்காமல் மோசம் செய்துவிட்டார் என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் என்னுடைய சொத்தின்மதிப்பு குறைவு என்றும், ஞானசேகரன்

சொத்தின் மதிப்பு அதிகம் என்பதால் அதனை சரி செய்வதற்கு ரூபாய் 5 கோடி 18 லட்சத்து 50 ஆயிரத்தை எனக்கு கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் இருக்கலாம். சீனிவாசன் என்பவருக்கு நான் கொடுத்த கிரையம் சட்டப்படியானது என்றால் சரிதான். சீனிவாசனுக்கு நான் கொடுத்த சொத்தை பொறுத்து எக்காலத்திலும் அதனை எனக்கு திருப்பி செலுத்த வேண்டும் என்று நான் கோரவில்லை. சீனிவாசனுக்கு கிரையம் சொடுத்த சொத்தில், எனது மற்ற சகோதரர்களுக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** – இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.